[2011 ஜூன் 10

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

6. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/2009) 1-9-2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 25-8-2009 ஆம் நாளிட்ட 155 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட

2011 ஜூன் 10]
நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (ஐந்தாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/2008) 1–9–2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 9–6–2009 ஆம் நாளிட்ட 94 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி. ஜே. 1) துறையின் 17–2–2011 ஆம் நாளிட்ட 25 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு [தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பேரூராட்சியினை இரண்டாம் நிலை நகராட்சியாக வகைப்படுத்தப்பட்டது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறையின் 2–9–2010 ஆம் நாளிட்ட 208 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. வேலூர் மாவட்டம், மேல்விஷாரம் மூன்றாம் நிலை நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக வகைப்படுத்தப்பட்டது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறையின் 5–1–2011 ஆம் நாளிட்ட 9 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2011 ஜூன் 10

11. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. (1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

12. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 17/1961) 125(2)(a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–